புனித தோமையர்மலை வடக்கு ஒன்றியம், பொழிச்சலூரைச் சேர்ந்த புரட்சிபாரதம் கட்சியில் இருந்து பொழிச்சலூர் ஆசிம் தலைமையில் 50 பேர் கூண்டோடு விலகி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அருகில் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி, தொ.மு.ச. செயலாளர் இரா.பொன்னுராம், ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், ஒன்றிய துணைச் செயலாளர் செல்வராஜ், ஊராட்சி மன்றத் தலைவர் வனஜா தயாளன், துணைத் தலைவர் ஜோசப், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் அன்பு பிரபாகரன் உள்ளிட்டோர் உள்ளனர்.

தி.மு.க. பொறியாளர் அணி

மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள் காணொலிக் கூட்டம்!

பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

தி.மு.க. பொறியாளர் அணி மாநில தலைவர் துரை கி.சரவணன் தலைமையில் மாநில நிர்வாகிகள் முன்னிலையில் பொறியாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொள்ளும் காணொலிக் கூட்டம் நடைபெற உள்ளது.

நாள் : 31-05-2026, ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி

பொருள்: 1) முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் கொண்டாட்டம் & நலதிட்ட உதவிகள் குறித்து.

2) அணியின் செயல்திட்டங்கள் குறித்து.

இக்கூட்டத்தில் பொறியாளர் அணி மாநில மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திராவிட முன்னேற்ற கழக பொறியாளர் அணி

எஸ்.கே.பி.கருணா
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

வேலூர் செங்கல் சூளைகளில் மாமூல் கேட்டு மிரட்டல்

த.வெ.க.வினரை கைது செய்யக்கோரி பொதுமக்கள் சாலை மறியல்!

வேலூர், மே 28 –

வேலூர் கணியம்பாடி செங்கல் சூளைகளில் மாமூல் கேட்டு மிரட்டல் விடுத்த தவெகவினரை கைது செய்யக்கோரி பொதுமக்கள் மறியலில் ஈடுபட்டனர். வேலூர் அடுத்த கணியம்பாடி, கணியம்பாடி புதூர், நெல்வாய், வல்லம் உள்ளிட்ட இடங்களில் 25க்கும் மேற்பட்ட செங்கல் சூளைகள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் கடந்த 22ம் தேதி கணியம்பாடி ஒன்றிய தவெக செயலாளர் விஜயகுமார், நிர்வாகிகள் லோகேஷ், ஈஸ்வரன் உட்பட பலர் கார், பைக்குகளில் கணியம்பாடி புதூரில் இயங்கி வரும் செங்கல்சூளைகளில் புகுந்து மாதம் ரூ.1 லட்சம் கொடுக்காவிட்டால் சூளைகளை இழுத்து மூடுவோம் என மாமூல் கேட்டு மிரட்டியதோடு ஆபாசமாக பேசி உள்ளனர்.

இதில் தகராறு ஏற்பட்டதால் வேலூர் தாலுகா போலீசார் இருதரப்பையும் சமாதானப்படுத்தினர். இதற்கிடையில் த.வெ.க.வினர் மாமூல் கேட்டு மிரட்டிய வீடியோ வைரலானது.

மேலும் செங்கல்சூளை உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் தாலுகா போலீசாரிடம் புகார் மனு அளித்தனர். ஆனால் புகார் கொடுத்து 2 நாட்கள் ஆகியும் போலீசார் நடவடிக்கை எடுக்காததால் செங்கல் சூளை உரிமையாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் நேற்று முன்தினம் காலை கணியம்பாடி பஸ் நிறுத்தம் அருகே மறியலில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த தாசில்தார் பழனி மற்றும் தாலுகா போலீசார் மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது 'மிரட்டல் விடுத்த தவெக நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கும்வரை போராட்டத்தை கைவிடமாட்டோம்' என தெரிவித்தனர். அதற்கு போலீசார், நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

இதையடுத்து பொதுமக்கள் மறியலை கைவிட்டு, சாலையோரமாக நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அனைவரையும் ஆர்ஜ அலுவலகத்திற்கு வரவழைத்து, ஆர்டிஓ செந்தில்குமார் தலைமையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆர்டிஓ செந்தில்குமார் கூறுகையில், பணம் கேட்டு மிரட்டியதற்கான ஆடியோ ஆதாரம் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

அதை சமர்ப்பிக்க அறிவுறுத்தி உள்ளோம். ஆதாரம் உண்மையாக இருந்தால் வழக்குப்பதியப்படும் என்றார். இதையடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

செங்கல் சூளை உரிமையாளர்கள் மற்றும் அப்பகுதி பெண்கள் கூறுகையில், 'கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக செங்கல் சூளை தொழிலையே வாழ்வாதாரமாக நம்பி 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வாழ்ந்து வருகிறோம்.

திடீரென எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில் மாமூல் கேட்டு மிரட்டுவது கண்டிக்கத்தக்கது. மாமூல் கேட்டு மிரட்டிய த.வெ.க. நிர்வாகி விஜய குமார் உள்ளிட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்டவரை அக்கட்சி பதிவிலிருந்து நீக்க வேண்டும்' என்றனர்.

ஆண்டிப்பட்டியில் கைத்தறி சங்க நிலம் தனியாருக்குத் தாரைவார்ப்பு!

கைத்தறி நெசவாளர்கள் கடும் எதிர்ப்பு!

த.வெ.க. அரசு மீது சரமாரிப் புகார்!

தேனி, மே 28 –

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி நகரில், தேனி – மதுரை நெடுஞ்சாலையில் சக்கம்பட்டி கைத்தறிநெசவாளர் சங்கத்திற்குச் சொந்தமான சுமார் 80 சென்ட் நிலம் உள்ளது. , இந்த நிலம் திடீரென இயந்திரங்கள் மூலம் சுத்தம் செய்யப்பட்டது. இதைப் பார்த்த நெசவாளர் சங்க உறுப்பினர்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர். இதுகுறித்து அவர்கள் விசாரித்தபோது, இந்த நிலத்தைத் தனி நபர் ஒருவருக்கு குறைந்த வாடகைக்கு விடுவதால் அரசுக்கு பல லட்சம் இழப்பு ஏற்படும் வகையில் கைத்தறித்துறை அதிகாரிகள் ரகசியமாக நடவடிக்கை எடுத்துள்ளது தெரியவந்தது.

நெசவாளர்கள் சரமாரி புகார்:

இதுகுறித்து நெசவாளர் சங்க உறுப்பினர்கள் தரப்பில் கூறப்படுவதாவது:

நெசவாளர் சங்கத்திற்குச் சொந்தமான இவ்வளவு மதிப்புமிக்க இடத்தை, சங்கத்தில் உள்ள உறுப்பினர்களின் பயன்பாட்டிற்கு வாடகைக்கு விடாமல், ஒரே ஒரு தனி நபருக்குக் குறைந்த வாடகைக்குத் தாரளம் காட்ட அதிகாரிகள் முயன்றுள்ளனர். இதனால் அரசுக்கு மிகப்பெரிய வருவாய் இழப்பு ஏற்படுவதோடு, நெசவாளர் சங்க உறுப்பினர்களின் வாழ்வாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்படும்.

கடந்த கால திமுக ஆட்சியில் இந்த நிலத்தை வாடகைக்கு விடாமல் பாதுகாத்து வந்தனர். ஆனால், தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் இந்த நிலத்தை முறைகேடாகத் தனிநபருக்குத் தாரைவார்க்க அதிகாரிகள் துடிக்கிறார்கள். இதுகுறித்து அரசு உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மதுரை கைத்தறி துறை உதவி இயக்குநர் சேரன் அவர்களிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

நெசவாளர் சங்கத்திற்குச் சொந்தமான பல்வேறு நிலங்கள் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் சிக்கி யுள்ளன. அவற்றை மீட்பதற்கு துறை ரீதியாகப் பல்வேறு தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது தேனி மதுரை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இந்த 80 சென்ட் நிலம் நீண்ட நாட்களாக பராமரிப்பின்றிப் புதர் மண்டி இருந்தது. இந்த இடம் மீண்டும் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் சிக்கிவிடக் கூடாது என்பதற்காகவே, அதனைச் சுத்தம் செய்து, வாடகைக்கு விட்டு பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள முதற்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எதிர்காலத்தில் அரசு சார்ந்த கட்டடங்கள் கட்டுவதற்கு இந்த இடம் தேவைப்பட்டால், உடனடியாக வாடகைதாரர்களை அகற்றிவிட்டு அரசிடம் ஒப்படைக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், நெசவாளர்களின் எதிர்ப்பை அடுத்து, தற்போது இந்த இடத்தை வாடகைக்கு விடுவதற்கான எந்தவொரு முயற்சியும் இனி மேல் எடுக்கப்பட மாட்டாது, என்று அவர் தெரிவித்தார்.

நெசவாளர் சங்க நில விவகாரத்தில் அதிகாரிகளின் இந்த திடீர் பின்வாங்கல் ஆண்டிபட்டி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

'சொல் புதிது' திட்டம்: 47 சொற்கள் இறுதி!

சென்னை, மே 28 -

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் சென்னையில் நடைபெற்ற சொல் புதிது திட்டக் கூட்டத்தில் ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக 47 தூய தமிழ்ச் சொற்கள் இறுதி செய்யப் பட்டன.

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் சொல் புதிது' திட்டத்தின் 13ஆவது கூட்டம் சென்னையில் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் ம.இராசேந்திரன் தலைமை வகித்தார். இதில் பேராசிரியர்கள் மு.இராம சுவாமி. சா.சரவணன், ஒப்பிலா மதிவாணன், விஜயலட்சுமி , ம.இளங்கோவன், தி.கமலி, இரா.கஸ்தூரி ராஜா, பாரதி பாலன், ஊடகவியலாளர்கள் ராஜ்கண்ணன், நீரை மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில், கேடஸ்ட்ரோஃபி - பேரழிவு, டஃபிள் பேக்-உருளைப் பை, ஃபேஸைல் ஆக்ட் - மேம்போக்குத்தனம், கிச்சன் க்ளீனர் - அடுக்களைத்தூய்மி, ஸெடன்ட்டரி லைஃப் ஸ்டைல் - இயக்கமில்லா வாழ்க்கை முறை, ஸ்னைல் - ஏளனம், டீட்டர்ஸ் - தள்ளாட்டம் என்பன உள்பட 47 ஆங்கிலச் சொற்களுக்கு இணையாக தூய தமிழ்ச் சொற் கள் இறுதி செய்யப் பட்டன.

திருவள்ளூர் அடுத்த மணவாளநகரில்

2 நாட்களாக நீடித்து வரும் மின்தடையால் பொதுமக்கள் அவதி!

300—க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சாலை மறியல்!

திருவள்ளூர், மே 28:

திருவள்ளூர் அடுத்த மணவாளநகர் அருகே உள்ள ஜல்லிமேடு பகுதி மற்றும் கன்னியம்மன் கோவில் தெரு உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 2 நாட்களாக நீடித்து வரும் மின் தடையை கண்டித்து, என்டிபி திருமண மண்டபம் எதிரே சாலையில் அமர்ந்து 300-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் பெண்கள், முதியோர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர். "உடனே மின்சாரம் வழங்க வேண்டும்", "மக்களை அலட்சியம் செய்யாதீர்கள்" என தொடர்ந்து கோஷங்கள் எழுப்பியதால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது. மேலும், மின்சாரம் இல்லாததால் குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் வேதனை தெரிவித்தனர்.

"குழந்தைகளுக்கு குடிக்க கூட தண்ணீர் இல்லை. இரவு முழுவதும் இருளில் தவிக்கிறோம். முதியோர்கள், கர்ப்பிணி பெண்கள் கடும் சிரமத்தில் உள்ளனர்" என பெண்கள் கண்ணீருடன் தெரிவித்தனர். மேலும், "மின்சாரம் வழங்கும் வரை இந்த போராட்டத்தை கைவிடமாட்டோம். பகலும் இரவும் தொடர்ந்து போராட தயாராக இருக்கிறோம்" என்று பொதுமக்கள் தெரிவித்ததால் அங்கு பரபரப்பாக காணப்பட்டது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மணவாளநகர் போலீசார் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இந்த போராட்டம் காரணமாக அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவியது. உடனடியாக மின்வாரிய அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததையடுத்து பொது மக்கள் கலைந்து சென்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி நங்கநல்லூர் கே.சி.டி. மஹாலில் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் என்.சந்திரன் தலைமையில், நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான தா.மோ.அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் ஆலோசனைகளை வழங்கினார்கள். இதில் இ.கருணாநிதி, எம்.எஸ்.கே. இப்ராஹிம், கோல்டு பிரகாஷ், சுந்தர்ராஜன், பாபு, ரமேஷ், சாலமோன், துர்கா தேவி நடராஜன், வட்ட கழக செயலாளர்கள் நடராஜன், உலகநாதன், ஜேசுதாஸ், ஜெகதீஸ்வரன், வேலவன், சரவணா, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

போதுமான புரிதல் இல்லாத அமைச்சரின் கீழ் இயங்குகிறது!

மின்வாரியம் இவ்வளவு மோசமாக முன்னெப்போதும் இருந்ததில்லை!

தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, மே 28-

போதுமான புரிதல் இல்லாத அமைச்சரின் கீழ் தமிழ்நாடு மின்சார வாரியம் இயங்குகிறது. எனவே தான் கடுமையான மின் வெட்டு நிலவுகிறது. முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் மோசமாக உள்ளதாக தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மற்றும் பல மாவட்டங்களில் ஏற்பட்ட தொடர் மின்வெட்டு சம்பந்தமாக, மின்துறை அமைச்சர் ஊடகங்கள் வாயிலாக தெரிவித்த தவறான குற்றச்சாட்டிற்கு மறுப்பு தெரிவித்து தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் 2021 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் 2026 வரை முன்னாள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கும் குறிப்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் பல நன்மைகள் செய்துள்ளார்கள். தமிழ்நாட்டில் சுமார் 3 கோடியே 36 இலட்சத்து 55 ஆயிரம் நுகர்வோர்கள் இருக்கின்ற நிலையில், அவர்களின் உட்சபட்ச மின் தேவையான 27,307 மெகாவாட் (நாள்:29. 04.2026) மின்சாரத்தை எவ்வித தடையும் இன்றி வழங்கி, தமிழ் நாட்டு மக்களின் மின்தேவையை முழுமையாக பூர்த்தி செய்யும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்தது தான் திராவிட மாடல் ஆட்சி!. கடந்த 5 ஆண்டு கால கழக ஆட்சியில் தேவைக்கேற்ப துணை மின்நிலையங்களை அதிகப்படுத்தியும், மின்விநியோகக் கட்டமைப்பை கூடுதலாக நிறுவியும் மற்றும் பலப்படுத்தியும், ஆங்காங்கே புதிய மின்மாற்றிகளை அமைத்தும் மின்சாரத்தை கொண்டு செல்வதற்கு ஏதுவாக HT மற்றும் LT லைன்களை புதியதாக நிறுவியும் மின்நுகர்வோருக்கு எவ்விதமாக இடர்பாடுகளும் ஏற்படாதாவாறு மிகச்சிறந்த நிர்வாகத் திறமையுடன் கையாளப்பட்டதே, கடந்த தி.மு.கழக ஆட்சியில் தடையில்லா மின்சாரம் வழங்கிட காரணமாகும்.

பொதுமக்களின் புகார்களை 2021ல் மின்னகம் (கைப்பேசி எண் 94987 94987) என்ற பிரிவை ஏற்படுத்தி, அதன் மூலம் பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் புகார்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்து எவ்வித காலதாமதம் இன்றி பொதுமக்கள் பயன்படும் வகையில் புதிய மின்இணைப்பு, பெயர்மாற்றம் உள்ளிட்ட மற்ற சேவைகளும் சிறப்பாக தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்டதை ஏதோ இந்த அரசு வந்த பிறகு தான் இந்த வசதி ஏற்படுத்தப்பட்டது போல ஒரு அமைச்சர் பேசுவது வடிகட்டிய பொய்யாகும்.

தமிழ்நாட்டின் உச்ச பட்ச மின்தேவை கடந்த 29.04.2026 அன்று 21,307 மெகாவாட் அதே நாளில் உச்சபட்ச மின்நுகர்வு 471.456 மில்லியன் யூனிட் ஆகும். கடந்த 4 நாட்களாக தமிழகத்தில் வெயிலின் தாக்கம் 108 டிகிரி வரை இருந்தது. அதன் காரணமாக மின்சாரம் நுகர்வு உயர்ந்துள்ளது. ஆகையால் மின்விநியோகத்தில் கடும் இடர்பாடுகள் ஏற்பட்டடுள்ளது. அதனால் தற்சமயம் கடந்த ஒரு வாரமாக மின்நுகர்வோரின் தேவையை சமாளிக்க முடியாமல் கடும் மின்வெட்டு ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வீதிக்கு வந்து இந்த அரசுக்கு எதிராக கண்டனங்களை தெரிவித்து வருகிறார்கள். கடந்த காலங்களில் இது போன்று மின்விநியோகத்தில் இடர்பாடுகள் ஏற்படும்போது அனைத்து மின்தொழிற்சங்க நிர்வாகிகளையும் கலந்து ஆலோசித்து அதற்கான தீர்வு காணப்பட்டது. கோடை காலத்தில் தேவைப்படும் கூடுதல் மின்சாரத்தை எங்கிருந்து எப்படி பெறப் போகிறோம் என்று முன் கூட்டியே மின்வாரிய அதிகாரிகளுடனும், தொழிற் சங்கங்களுடனும் விவாதித்து முன்னெச்சரிக்கைகான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய மின்சாரத் துறை அமைச்சர் கடந்த கால தி.மு.க. ஆட்சியின் மீது பழிப்போட்டு தப்பிக்க முயற்சிக்கிறார். மேலும் ஏற்பட போகும் கூடுதல் மின்தேவைக்காக எவ்வித முன்நடவடிக்கை எடுக்காமல் மின்சாரத் துறை பற்றிய போதுமான புரிதல் பெறாத அமைச்சரின் கீழ் இயங்கும் மின்வாரியம் இவ்வளவு மோசமாக முன்னெப்போதும் இருந்ததில்லை. 'வரும் பொருள் உரைத்தல் மந்திரிக்கு அழகு' என்பது தமிழ் பழமொழி! வந்த பின்பும் பொருள் உரைக்க முடியாமல் திணறுவது மந்திரியாய் இருக்கவே தகுதியில்லை என்பதை காட்டுகிறது இந்த மின்வெட்டு!

எனவே தி.மு.க. ஆட்சியின் மீது பழிபோடுவதை நிறுத்திவிட்டு இனிமேலாவது துறைரீதியாக அதிகாரிகளுடனும், தொழிற் சங்கங்களுடனும் ஆய்வுக் கூட்டம் நடத்தி, விவாதித்து மின் தட்டுப்பாட்டை நீக்கி மக்களை காப்பாற்ற இந்த அரசு முன் வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் தெரிவித்துள்ளார்.